பக்கங்கள்: 06

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 17 வெள்ளிக்கிழமை 01.07.2022 கதிர் 129

## ‘மே - 09’ வன்முறை; 3,056 பேர் சிக்கினர்



### தொடர்கின்றது கைது வேட்டை

கடந்த மே 9ஆம் திகதி நாடளாவிய ரீதியில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் இன்று காலை 6 ☞2

### தமிழ்த் தேசியப் பண்பாட்டுப் பேரவையின் ஒருங்கிணைப்பாளர்

# நிஷாந்தன் மீது மர்மநபர்களால் சரமாரி வாள்வெட்டுத் தாக்குதல்

### - யாழ். எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பயங்கரம்



(இ.கலையமுதன்)

தமிழ்த் தேசியப் பண்பாட்டுப் பேரவையின் ஒருங்கிணைப்பாளர் எஸ். நிஷாந்தன் மீது இனந் தெரியாத மர்மநபர்களால் சரமாரியாக வாள்வெட்டுத் ☞2



# நாட்டைச் சீரழித்துவிட்டார் கோட்டா

### - மைத்திரி கடும் விசனம்



பொய் கூறி ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இன்று நாட்டைச் சீரழித்துவிட்டார்.

– இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். ☞2

## சு.கவுடன் மேர்வின் மீண்டும் சங்கமம்!



இலங்கையில் சர்ச்சைக்குரிய அரசியல்வாதியாகக் கருதப்படுகின்ற முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா, சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் மீண்டும் இணைந்துள்ளார்.

சுதந்திரக் கட்சி தலைவரான மைத்திரிபால சிறிசேனவை சந்தித்து, ☞2

## ரயில்வே ஊழியர்கள் திடீர் வேலைநிறுத்தம்

கொழும்பு, கோட்டையில் இருந்து புறப்படவிருந்த அனைத்து ரயில் சேவைகளும் இன்று நண்பகல் முதல் நிறுத்தப்பட்டுள்ளன.

ரயில்வே ஊழியர்களால் முன்னெடுக்கப்படும் வேலை நிறுத்தப் போராட்டம் காரணமாகவே ரயில் ☞2

## ஒட்டுமொத்த மக்களையும் ஒரே சவக்குழிக்குள் புதைக்கும் ஜனாதிபதியாகத் திகழும் கோட்டா!

### கூட்டமைப்பின் எம்.பி. ஜனா சாடல்

2009ஆம் ஆண்டு ஒரு இலட்சத்து 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்களை முள்ளிவாய்க்காலில் கொன்று குவித்த கோட்டாபய ராஜபக்ஷ, இன்று இந்நாட்டின் ஒட்டுமொத்த மக்களையும் ஒரே சவக்குழிக்குள் புதைக்கும் ஜனாதிபதியாகத் திகழ்கின்றார்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் (ஜனா) தெரிவித்தார்.

கோட்டாபய ராஜபக்ஷ இந்த நாட்டுக்குச் சாபக்கேடு ☞2



## கந்தக்காடு விரைந்துள்ளது மனித உரிமை ஆணைக்குழு

### 73 கைதிகள் இதுவரை சிக்கவில்லை

பொலன்றுவை மாவட்டத்திலுள்ள வெலிக்கந்தை - கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் இடம்பெற்ற மோதல் நிலை குறித்து விசாரணைகளை முன்னெடுப்பதற்காக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ☞2



## 177 பவுன் நகைகள் திருட்டு; பெண் உட்பட 4 பேர் மாட்டினர்



நோர்வூட் நகரிலுள்ள தங்க நகை அடகு பிடிக்கும் நிலையமொன்றை உடைத்து சுமார் 3 கோடி 15 இலட்சம் பெறுமதியுடைய 177 பவுண்களைத் திருடிய நான்கு சந்தேகநபர்கள், சம்பவம் இடம்பெற்று 6 மாதங்களுக்குப் பின்னர் கைதுசெய்யப்பட்டனர்.

நோர்வூட் நகரப் பகுதியில் வாழும் மூன்றுஆண்களும், பெண்ணொருவருமே ஹற்றன் பொலிஸின், ☞2

## நீண்ட வரிசையில் காத்திருப்போருக்கு குடிதண்ணீர் வசதி செய்த இராணுவம்

### எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகில் நீர்த் தாங்கி



அச்சுவேலி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருளுக்காகக் காத்திருப்போருக்குக் குடிதண்ணீர் வழங்கும் வகையில் இராணுவத்தினரால் எரிபொருள் நிரப்பு ☞2

## ஒட்டுமொத்த மக்களை ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனவும் அவர் கூறினார். மட்டக் களப்பிலுள்ள அவரது அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்,

இந்தநாட்டில்பொருளாதாரநெருக்கடி ஏற்பட்டு எரிபொருள், எரிவாயு, மின்சாரம், உணவுப்பொருள்கள், பால்மா என பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. எரிபொருள் என்பது மிக முக்கியமான தேவையாகக் கருதப்படுகின்றது. எரிபொருள் இல்லாவிட்டால் நாடு ஸ்தம்பிதம் அடையும் நிலைக்குத் தள்ளப்படும்.

உணவு உற்பத்தி, விநியோகம், போக்குவரத்து உட்பட அனைத்து விடயங்களும் எரிபொருளை அடிப்படையாக வைத்துத்தான் நடைபெறுகின்றன.

அத்தியாவசிய சேவையை அரசு பிரகடனப்படுத்தியுள்ளது. இந்த அத்தியாவசிய சேவைகளுக்குள் உணவு விநியோகம், சுகாதாரம், விவசாயம் என்பன உட்படுத்தப்படுவது அவசியம் என்றாலும் இந்தத் தேவைகளுடன் இணைத்து சிறு வியாபாரிகளும் அத்தியாவசிய சேவைக்குள் உள்வாங்கப்படவேண்டும்.

இன்று சிறு வியாபாரிகள், மீனவர்கள், ஒட்டோசாரதிகள், கூலித்தொழில் செய்வோர் போன்றோர் அன்றாடம் தமது வாழ்வாதாரத்தைக் கொண்டு செல்ல முடியாத நிலையேற்பட்டுள்ளது. ஒட்டோ சாரதிகள் ஒட்டோவைத் தவணை முறை அடிப்படையில் வங்கிகளிலும் லீசிங் நிறுவனங்களிலும் பெருமளவு கடனில் பெற்றவர்கள். இவர்களின் தேவை நாட்டுக்கு முக்கியமாகவுள்ள நிலையில் அவர்கள் இன்று தமது குடும்பத்தையே கொண்டு நடத்த முடியாத நிலைக்கு இந்த எரிபொருள் பிரச்சினை தள்ளியுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட மக்கள் மீன்பிடி, விவசாயத்தையே அதிகளவில் நம்பியுள்ளனர். வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களும் அதிகளவில் இந்த மாவட்டத்தில் வாழ்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அன்றாடம் கூலித்தொழில் ஈடுபடும் மக்கள் தமது தொழிலை சிரமமின்றி மேற்கொள்வதற்கான முன்னுரிமை வேலைத்திட்டத்தினை அரச அதிபர் முன்னெடுக்க வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்த வரையில் நிர்வாகச் செயற்பாடுகள் சீர்குலைந்த நிலையிலேயே காணப்படுகின்றன.

இன்று கிராமப்புற பாடசாலைகளை நடத்துமாறு அரசு கூறுகின்றது. கிராமத்துக்குச் செல்லும் ஆசிரியர்கள் அங்கு வசிப்போர் அல்லர். பல கிலோமீற்றர் தூரமிருந்து செல்பவர்கள் உள்ளனர். பொதுப்போக்குவரத்துக்கூட இல்லாத பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் எவ்வாறு கடமைக்கு செல்வார்கள்?

இதேபோன்று தனியார் வகுப்புக்களைக் குறிப்பட்ட நாளைக்கு நிறுத்துமாறு மாவட்ட அரச அதிபர் உள்ளூராட்சி சபைகளின் தலைவர்களை அழைத்து அறிவுறுத்தல்களை வழங்க வேண்டும்.

இந்த நாட்டின் அரசால் இந்தியாவிடம் எரிபொருள்கள் ஒரு கால கடன் அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டன. அந்தக்கடன்திட்டம்முடிவடைந்துவிட்டது என அரசு கூறுகின்றது. அடுத்த கப்பல் எப்போது வரும் என்று தெரியாது என எரிபொருள் அமைச்சர் கூறுகின்றார். ஆனால், இந்த அமைச்சர் கட்டாருக்கு எரிபொருள்கடன் கேட்டுச்சென்றுள்ளார்.

பெற்றோல் இந்த நாட்டில் முடிவடைந்த பின்னரே இவர்கள் பெற்றோல் கடன் கேட்டுச் செல்கின்றனர். இவ்வாறு முகாமை செய்யத் தெரியாத அமைச்சர்களும் ஜனாதிபதியும் இந்த நாட்டுக்குத் தேவையா?

இந்தநாட்டின்அரசதலைவராகவுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்த நாட்டுக்குச் சாபக்கேடு. இவர் தனிமனிதனாக இந்த நாட்டு மக்களை சவக் கிடங்குக்குள் புதைக்குமளவுக்குச் செயற்பட்டு வருகின்றார். 2009ஆம் ஆண்டு இறுதிப் போர்க்காலத்தில் முள்ளிவாய்க்கால் என்னும் சிறிய நிலப்பகுதிக்குள் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் மக்களைக் கொன்று குவித்த கோட்டாபய ராஜபக்ஷ, இன்று ஒட்டுமொத்த நாட்டு மக்களையும் ஒரே சவக்குழிக்குள் புதைக்கும் ஜனாதிபதியாகத் திகழ்கின்றார் - என்றார்.

## 117 பவுண் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊழல் ஒழிப்புப் பிரிவு அதிகாரிகளால் நேற்று கைதுசெய்யப்பட்டனர்.

2021ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 9ஆம்திகதியன்றேகடைஉடைக்கப்பட்டு தங்க நகைகள் களவாடப்பட்டன. இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு முன்வைக்கப்பட்டது.

இதையடுத்து, குறித்த கடையில் சுமார் 10 வருடங்களாக வேலை செய்த பெண்ணொருவர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அவரது கைரேகை அடையாளங்களும் பதிவு செய்யப்பட்டன.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்திய பெண்ணின் கைரேகையும் மீட்கப்பட்ட பொருள்களில் உள்ள கைரேகையும் ஒரே மாதிரியானவை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்பின்னர் விசாரணை வேட்டை ஆரம்பமானது. களவாடப்பட்ட நகைகளை விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வேளையிலேயே, சூத்திரதாரிகள் அதிரடியாகக் கைது செய்யப்பட்டனர்.

54 தங்கச் சங்கிலிகள், 757 தோடுகள், 177 பெண்டனர்கள், 18 வலையல்கள், 1 தங்க நெக்லஸ் உட்பட மேலும் சிலதங்க நகைகளேதிருடப்பட்டிருந்தன.

கைதானவர்கள் மேலதிக விசாரணைகளின் பின்னர் சட்ட நடவடிக்கைகளுக்காக ஹட்டன் நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர்.

## 'மே 9' வன்முறை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் 14 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதன்படி, அன்றைய தினம் இடம்பெற்ற 857 வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக இதுவரை மொத்தமாக 3 ஆயிரத்து 56 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அவர்களில் 1,150 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

## நீண்ட வரிசையில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையத்துக்கு அருகில் நீர்த் தாங்கி ஒன்று வைக்கப்பட்டுள்ளது. அதனூடாக மக்களுக்குத் தொடர்ந்து குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகின்றது.

நாடளாவிய ரீதியில் எரிபொருளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவி வரும் நிலையில் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் முன்பாக மக்கள் எரிபொருளுக்காக நீண்ட வரிசைகளில் காத்திருக்கின்றனர்.

தற்போது கடுமையான வெய்யில் காலமாக இருப்பதால் வரிசையில் காத்திருப்பவர்கள் தாகத்துடனையே அதிக நேரம் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், வரிசையில் காத்திருப்போருக்குக் குடிதண்ணீர் வழங்கும் வகையில் இராணுவத்தினர் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகில் நீர்த் தாங்கியை வைத்துள்ளனர்.

## கந்தக்காடு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணைக் குழு இன்று அங்கு சென்றுள்ளது.

குறித்த மோதல் சம்பவம் தொடர்பிலும், தடுத்துவைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் உயிரிழந்தமை தொடர்பிலும், விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்ற மோதல் சம்பவத்தை அடுத்து, அங்குதடுத்துவைக்கப்பட்டிருந்த 998 கைதிகளில் 726 பேர் மறுநாள் புதன்கிழமை அதிகாலை தப்பிச் சென்றிருந்தனர்.

இதையடுத்துப் பாதுகாப்புத் தரப்பினர் முன்னெடுத்த தேடுதல் நடவடிக்கைகளில் 653 பேர் மீளவும் பொறுப்பேற்கப்பட்டதுடன், 73 பேர் தொடர்ந்தும் தேடப்படுகின்றனர்.

பொலிஸார், பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மற்றும் இராணுவத்தினர் தொடர்ந்தும் தேடுதல்களை முன்னெடுத்து வருகின்றனர் என்று புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் உள்ளக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## நிஷாந்தன் மீது......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் கச்சேரி எரிபொருள் நிலையத்துக்கு அருகில் இன்று அதிகாலை நிஷாந்தன் காத்திருந்த வேளை பின்னால் வந்த இரு நபர்களால் அவர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அவர் உடனடியாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார்.

பாலியல் குற்றங்களுக்குத் தண்டனைகள் வழங்கப்பட வேண்டும் என்பது தொடர்பிலும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மக்கள் மத்தியில் செயற்படாமை தொடர்பிலும் நான் அண்மையில் கருத்துத் தெரிவித்த நிலையில் இது திட்டமிட்டு இடம்பெற்ற தாக்குதலாக இருக்கலாம் என்று நிஷாந்தன் சந்தேகம் வெளியிட்டார்.

## சு.கவுடன்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சி உறுப்புரிமையை அவர் பெற்றுள்ளார். மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் பலம்மிக்க அமைச்சராக வலம் வந்த மேர்வின் சில்வா, தனக்கே உரிய பாணியில் அடாவடி அரசியலையும் முன்னெடுத்தார். களனித் தேர்தல் தொகுதியை தனது அரசியல் கோட்டையாக மாற்றியமைத்துக் கொண்டார். அங்கு கட்டபஞ்சாயத்து அரசியலும் இடம்பெற்றது. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளராக இருந்த நவநீதம்பிள்ளை அம்மையார் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்தபோது, அவருக்குத் திருமண அழைப்பை விடுத்து, நாட்டுக்கு இராஜதந்திர மட்டத்தில் பெரும் களங்கத்தை ஏற்படுத்தியவர் மேர்வின் சில்வா.

கிராம சேவகர் ஒருவரை மரத்தில் கட்டிவைத்து, அரச நிர்வாக சேவையில் கடும் எதிர்ப்பைத் தேடிக் கொண்ட மேர்வின் சில்வா, ஊடக நிறுவனம் மீது தாக்குதல் நடத்தி ஜனநாயகத்துக்கும் அச்சுறுத்தல் விடுத்தவர்.

2015ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்கு அவருக்கு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி வேட்புமனு வழங்கவில்லை.

ராஜபக்ஷக்களுக்கு விசுவாசமாக இருந்த அவர், அதன் பின்னர் ராஜபக்ஷக்களைக் கடுமையாக விமர்சிக்க ஆரம்பித்தார்.

கடந்த பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி ஊடாக அநுராதபுரம் மாவட்டத்தில் அவர் போட்டியிட்டு தோல்வி அடைந்தார். தற்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் மீண்டும் இணைந் துள்ளார்.

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக இருந்த காலத்தில் அவரையும் மேர்வின் சில்வா கடுமையாக விமர்சித்திருந்தார்.

## ரயில்வே......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன. எரிபொருள் கிடைக்காமையால் ரயில்வே ஊழியர்களுக்குப் பணிகளுக்குச் செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதால் ரயில் சேவைகள் பல இரத்துச் செய்யப்பட்டதையடுத்து கோட்டை ரயில் நிலையத்தில் ஏற்பட்ட அமைதியின்மையைத் தொடர்ந்தே இந்த வேலைநிறுத்தம் முன்னெடுக்கப்படுகின்றது.

அங்கு அமைதியின்மை நிலவிய போதும், ரயில்வே திணைக்கள உயர் அதிகாரிகள் யாரும் அவ்விடத்துக்கு வரவில்லை என்று ரயில்வே தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

இதனால் தற்போதைய நிலைமையைக் கருத்தில்கொண்டு வேலை நிறுத்தப்போராட்டத்தை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளதாக ரயில்வே தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன

## நாட்டைச் சீரழித்து ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேசிய பாதுகாப்புக்கே முன்னுரிமை என அறிவிப்பு விடுத்து ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தற்போது அந்த உறுதிமொழியை மீறிவிட்டார். எனது ஆட்சியின்போது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டது எனச் சுட்டிக்காட்டினர். தாங்கள் ஆட்சிப் பீடமேறினால் தேசிய பாதுகாப்புக்கே முன்னுரிமை எனவும் அறிவிப்பு விடுத்த னர். ஆனால், இன்று என்ன நடக்கின்றது?

தற்போதைய அரசு சர்வகட்சி அரசு கிடையாது. அதன் மூலம் சர்வதேச ஆதரவைப் பெற முடியாது - என்றார்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பேரினவாதத் திமிரின் விளைவு

**தனது பௌத்த, சிங்களப் பேரினவாத அணுகுமுறையின் விளைவுகளை – விபரீதங்களை – ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இப்போது நன்கு பட்டுத் தெளிந்து உணரத் தொடங்கி இருப்பார் என நம்பலாம்.**

**தனது வாக்கு வங்கியைக் குறுக்கு வழியில் மேம்படுத்துவதற்கு பேரினவாத கிளர்ச்சி – இன வெறியூட்டல் – நன்கு உதவியமையை கடந்த ஜனாதிபதி தேர்தலிலும், நாடாளுமன்றத் தேர்தலிலும் கண்ட கோட்டாபய, அது தான் நிலையானது, சாசுவதமானது என்று நம்பி விட்டார் போலும்.**

**ஆனால் அன்று பேரினவாத வெறியூட்டலுக்கு எடுபட்டு, அவருக்கும் அவரது தரப்புக்கும் திரண்டு வாக்களித்த அவரின் ஆதரவாளர்கள்தான் இன்று அவரைப் பதவியில் இருந்து துரத்துவதற்கும் துடியாய்த் துடிக்கின்றார்கள்.**

**இது எப்படி சாத்தியம் என்று புரியாமல் இப்போது முழுசுகின்றார் அவர்.**

**பேரினவாதத் திமிரில் எப்படியெல்லாம் பேசினார், எப்படி எல்லாம் அவர் மிதப்பாய்ச் செயல்பட்டார் என்பதற்கு கொரோனாவை ஒட்டி அவரின் அரசு எடுத்த சிறுபிள்ளைத்தனமான – படு கேவலமான – மிக அற்பத்தனமான – நடவடிக்கை ஒன்றே சான்று. கொரோனாத் தொற்றில் உயிரிழந்தவர்களைப் புதைத்தால் கொரோனா கிருமிகள் பரவிவிடும் ஆபத்து இருப்பதாகக் கூறி, அப்படி உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களையும் பலவந்தமாக எரிக்கும் கைங்கரியத்தை கோட்டா அரசு சிறுபிள்ளைத்தனமாக மேற்கொண்டது. நிபுணர்களின் ஆலோசனை என்று இந்த முடிவுக்கு முலாம் பூசப்பட்டாலும், சிறுபான்மையினரான முஸ்லிம்களின் மத நம்பிக்கையை, இறுதி நிகழ்வு தொடர்பான அவர்களின் பாரம்பரிய வழக்காறுகளை கேவலப்படுத்தும் பேரினவாதத் திமிர்த்தனமே அத்தகைய முட்டாள்தனமான தீர்மானத்துக்குப் பின்னால் புதைந்து கிடந்தது என்பது உலகறிந்த இரகசியம். இதில் இரண்டு விடயங்கள் உள்ளன.**

**ஒன்று – அப்படி கொரோனாத் தொற்றோடு உயிரிழந்தோரைப் புதைத்தால் தொற்றுப் பரவும் ஆபத்து உண்டு என்று பரிந்துரைத்த குழுவினரின் – நிபுணர்களின் – அறிவியலாளர்களின் – விவரங்களை இன்று வரை கோட்டா அரசு வெளியிடவில்லை. அப்படியான பிரகிருத்திகளின் பெயர்ப் பட்டியலை கோட்டா அரசு இப்போது வெளியிட்டால் கூட அந்த குழுவில் இருக்கும் அந்தப் 'படித்த' பெருமக்களை, உலகின் கற்றறிந்த சமூகம் 'படுமுட்டாள்களாக', விஞ்ஞான உலகின் நிரந்தரத் 'தற்குறி'களாக அடையாளப்படுத்திப் புறமொதுக்கி விடும்.**

**அடுத்தது – கொரோனா தொற்றுப் பரவல் குறித்துப் பல நூறு விஞ்ஞானிகளையும், ஆய்வாளர்களையும், நிபுணர்களையும் வைத்து விஞ்ஞான ஆய்வுகள் நடத்தி வரும் அமெரிக்காவில் தொடங்கி, நமது பக்கத்து நாடான இந்தியா வரை அப்படி புதைப்பதை தடுக்காத போது, உலகில் ஆக இலங்கையில் மட்டும் கோட்டாபய ராஜபக்ஷக்ஷக்குத்தான் இப்படி ஒரு 'விஞ்ஞானப் பகுத்தறிவு ஞானம்' பிறந்திருந்திருக்கின்றது.**

**இந்த நாட்டின் சிறுபான்மைச் சகோதரர்களான முஸ்லிம்களை இப்படிக் கேவலப்படுத்திய கோட்டா அரசுக்கு, அதற்காக, இந்த நெருக்கடி சமயத்தில் உதவுவதற்கு முஸ்லிம்களின் செல்வாக்கு மிக்க மத்திய கிழக்கு நாடுகள் பின்னடிப்பதில் நியாயம் உண்டு.**

**இலங்கை முஸ்லிம் மக்களுக்கு உதவி வந்த கட்டார் தொண்டுநிறுவனத்தைப்பயங்கரவாதசெயற்பாடுகளோடு வேண்டுமென்றே தொடர்பு படுத்தித் தடை செய்து, கேவலப்படுத்திய பேரினவாத திமிரின் விளைவும் கோட்டாவின் அரசுத்தலைமைக்குஇப்போதுபுரியத்தொடங்கியிருக்கும்.**

**முஸ்லிம்களின் ஆழ்மனதில் மோசமாக தைத்த இத்தகைய படுகேவலக் கொடூர நடவடிக்கைகளுக்காக கோட்டா அரசு இன்னும் கூட பகிரங்கமாக மன்னிப்புக் கோராதமை அது இன்னும் பேரினவாத திமிரிலிருந்து – வெறித்தனப் போக்கில் இருந்து – இறங்கவில்லை என்பதற்கான அடையாளம்தான்.**

# மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நோயாளர் உயிருக்கு ஆபத்து!

## தனியார் மருந்தக உரிமையாளர்கள் சங்கம் எச்சரிக்கை

தொற்றா நோய்கள் உட்பட பல்வேறு நோய்களுக்கான மருந்து வகைகளுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன், நாட்டில் நோயாளிகளின் உயிருக்கு பாரிய ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும் அகில இலங்கை தனியார் மருந்தக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் சந்திக கங்கந்த தெரிவித்தார்.

தனியார் மருந்தக வாகனங்கள் மற்றும் மருந்து விநியோக நிறுவன வாகனங்களையும் அத்தியாவசிய சேவையாகக் கருதி எரிபொருளை உடனடியாக வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறுகையில் –

தனியார் மருந்தகங்களில் கடுமையான மருந்துத் தட்டுப்பாடு நிலவுகிறது. மருந்து வகைகள் இருக்கின்றனவா என ஒரு நாளைக்கு சுமார் 300 முதல் 350 தொலைபேசி அழைப்புகள் வருகின்றன.

வைத்தியசாலைகளில் மருந்து வகைகள் இல்லாததால், பலரும் தனியார் மருந்தகங்களுக்கு வருகின்றனர். அவர்கள் கேட்கும் மருந்துகளை மிகவும் சிரமத்துக்கு மத்தியிலேயே எடுத்துக்கொடுக்கிறோம். அவ்வாறான மருந்து வகைகளின் விலைகள் அதிகமாக இருக்கும்.

'புற்றுநோயாளிகளுக்கு மருந்துகள் இல்லை. இளைப்பு உள்ளவர்களுக்கான மருந்துகள் எதுவும் இல்லை. அறுவைச் சிகிச்சை செய்ததன் பின்னர் நோயாளிக்கு வழங்கப்படும் வலி நிவாரணிகள் இல்லை.

சிறுநீர் கழிப்பதில் சிரமம் உள்ள நோயாளிகளுக்கு கொடுக்க மருந்து இல்லை. மூக்கடைப்புக்கு கொடுக்கப்படும் மருந்துகளும் (ட்ரொப்ஸ்) இல்லை.

மேலும், காய்ச்சல் அதிகமாக இருக்கும் போது சிறு குழந்தைக்கு தடுப்பூசிகளும் இல்லை. இன்புளுவன்சா வைரஸ் நோயாளிக்கு அளிக்கப்படும் மருந்துகள். நோயாளியின் மூக்கு வழியாக திரவ உணவை அனுப்புவதற்கு குழாய்கள் இல்லை. ஒரு நோயாளிக்கு சிறுநீர் கழிக்க பயன்படுத்தப்படும் வடிகுழாய் இல்லை. அத்துடன், பல்வேறு மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. ஆகவே, அரசு சுகா தாரத்துறை அதிகாரிகள் இது தொடர்பில் உடனடியாகக் கவனம் செலுத்தப்பட வேண் டியது அவசியம்.

தனியார் மருந்தகங்கள் மற்றும் மருந்துகளை விநியோகிக்கும் வாகனங்களின் உரிமையாளர்களுக்குத் தேவையான டீசல் மற்றும் பெற்றோலை வழங்குமாறு சுகாதார அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளோம்.

ஆகவே, தனியார் மருந்தக உரிமையாளர்களுக்கும், மருந்துகளை விநியோகிக்கும் நிறுவனங்களுக்கும் எரிபொருள் வழங்க வேண்டும். இல்லாவிட்டால் நோயாளிகளின் உயிருக்கு மேலும் ஆபத்து ஏற்படும். –என்றார்.

# எட்டு லட்சம் ஓட்டோச் சாரதிகள் எரிபொருள் இன்மையால் பாதிப்பு

நாட்டின் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக சுமார் 8 லட்சம் ஓட்டோ சாரதிகள் மற்றும் வாடகை வாகன சாரதிகளும் எரிபொருள் பெற்றுகொள்வதில் பாரிய சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இந்நிலையில், எமக்கு உரிய முறையில் நிவாரணங்களை பெற்று தாருங்கள். இல்லையேல் பிரதமர் அலுவலகத்தை முற்றுகையிடுவோம் என்று அகில இலங்கை ஓட்டோ சாரதிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அகில இலங்கை ஓட்டோ சாரதிகள் சங்கத்தின் உறுப்பினர்கள் ஓட்டோ சாரதிகள் மற்றும் வாடகை வாகன சாரதிகளுக்கு வழங்கப்பட உள்ள நிவாரணம் என்ன என்பது தொடர்பில் கலந்துரையாடுவதற்காக சென்றிருந்த போது இந்த விடயம் தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சங்கத்தின் தலைவர் லலித் தர்மசிறி கருத்து தெரிவிக்கையில் –

ஓட்டோ சாரதிகள் அத்தியாவசிய சேவை வழங்கும் தரப்பினராக அல்லது பொது போக்குவரத்து பிரிவினராக உள்ளடக்கவில்லை.

கடந்த 12 ஆம் திகதியிலிருந்து 65 மணித்தியாலயங்கள் எரிபொருள் பெற்றுக் கொள்வதற்காக காத்திருந்தேன். நேற்று முன்தினம் மாலை டோக்கன் வழங்கப்பட்டது. பசியில் இருக்கும் ஒருவருக்கு பிரியாணி வழங்கும் செயற்பாடு இதுவாகும்.

பொறுப்பு வாய்ந்த தரப்பினர் இதற்கு பதில் வழங்க வேண்டும். 10 நாள்களுக்கு எவ்வாறு எமது பிள்ளைகளுக்கு உணவு வழங்க முடியும். என்ன நடக்கும் என்று யாருக்கும் தெரியாது.

இது தொடர்பில் கலந்துரையாடுவதற்கு பிரதமர் அலுவலகத்தில் பாதுகாப்பு பிரிவினருக்கு அருகில் மாத்திரமே செல்ல முடிந்தது. அங்கு மேலதிகாரி ஒருவருடன் மாத்திரமே கலந்துரையாடுவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டது. அவர் அனைத்தும் தெரியும் வகையில் கதைக்கிறார்.

மேலும் இதன் போது ஓட்டோ சாரதிகள் மற்றும் வாடகை வாகன சாரதிகளுக்கு நிவாரணங்கள்விரைவில்பெற்றுத்தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் வாக்குறுதி அளித்தார்.

இந்நிலையில், அவர்களுக்கு நாம் குறிப்பிட்ட சில தினங்கள் காலக்கேடு கொடுக்கிறோம். இவ்வாறு தீர்வுகள் பெற்றுத் தரத் தவறினால் பிரதமர் காரியாலயம் முற்றுகையிடப்படும். – என்றார்.

# விவரங்கள் இல்லாத பொருள்களை விற்பனை செய்வதற்கு தடை விதிப்பு

விலை, உற்பத்தி, காலாவதியாகும் திகதிகள் உள்ளிட்ட விவரங்கள் இல்லாத பொருள்களை விற்பனை செய்யவோ, களஞ்சியப்படுத்தி வைக்கவோ வேண்டாம் என வர்த்தகர்கள், தயாரிப்பாளர்கள், இறக்குமதியாளர்களுக்கு பணிப்புரை விடுக்கும் வர்த்தமானி அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் தலைவரின் கையொப்பத்துடன் இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

அதிகபட்ச சில்லறை விலை, எடை, அளவு, உற்பத்தி திகதி, காலவதியாகும் திகதி, உற்பத்தியாளரின் பெயர், முகவரி உட்பட சகல விவரங்களும் இல்லாத பொருள்களை விற்பனை செய்யவோ, களஞ்சியப்படுத்தி வைக்கவோ வேண்டாம் என வர்த்தகர்கள், தயாரிப்பாளர்கள், இறக்குமதியாளர்களுக்கு பணிப்புரை விடுக்கும் வர்த்தமானி அறிவித்தலே இவ்வாறு வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வாறு வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி எதிர்வரும் ஜூலை மாதம் 28 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரவுள்ளது.

இதேவேளை, இணையத்தளம் மூலம் விற்பனையில் ஈடுபடும் வர்த்தகர்களும் இந்த நடைமுறையைப் பின்பற்ற வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு
வெள்ளிக்கிழமை 01.07.2022

# நைஜீரியாவில் பஸ் தீப்பிடித்து 5 பேர் உடல் கருகி உயிரிழப்பு



நைஜீரியாவில் பஸ் தீப்பிடித்து எரிந்ததில் 5 பேர் உடல் கருகி இறந்தனர். 9 பேர் படுகாயமடைந்தனர். நைஜீரியாவின் தென்மேற்கு பகுதியில் லாகோஸ்–இபடான் நெடுஞ்சாலையில் ஒரு பஸ் வேகமாக சென்று கொண்டிருந்தது. திடீரென அந்த பஸ் தீப்பிடித்தது. குபுகுபுவென கரும்புகை வெளியேறியது. பஸ்ஸில் இருந்த பயணிகள் அனைவரும் அலறி துடித்தனர். தகவலறிந்து தீயணைப்பு படை வீரர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து தீயை அணைத்தனர். இந்த சம்பவத்தில் 5 பேர் உடல் கருகி இறந்தனர். 9 பேர் படுகாயமடைந்தனர். அவர்கள், உடனடியாக அருகில் உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இதுபற்றி அந்நாட்டின் தெற்கே அமைந்த ஆகன் மாகாணத்தின் மத்திய சாலை பாதுகாப்பு படையின் உயரதிகாரி அகமது உமர் கூறும்போது, 'ஆகிர் நகரில் சென்று கொண்டிருந்த பஸ் இயந்திர கோளாறால் தீப்பிடித்தது. இதில் 5 பேர் பலியாகினர். 9 பேர் காயமடைந்துள்ளனர். உடனடியாக அவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்' என்றார்.



## உச்சநீதிமன்ற நீதிபதியாக கறுப்பினப் பெண்

அமெரிக்க வரலாற்றில் முதல் முறையாக கறுப்பினப் பெண்மணி ஒருவர் உச்சநீதிமன்ற நீதிபதியாக பதவியேற்றுக் கொண்டார். அமெரிக்க உச்சநீதிமன்ற நீதிபதி ஸ்ரீபன் பிரெயர் ஓய்வுபெறுகிறேன் என கடந்த ஜனவரியில் அறிவித்தார். இதனையடுத்து காலியாகும் இடத்துக்கு கறுப்பின பெண்ணை நீதிபதியாக நியமிக்க அதிபர் ஜோ பைடன் உறுதி பூண்டிருந்தார். அதன்படி, நீதிபதி கேடான்ஜி பிரவுன் ஜாக்சனை அமெரிக்க உச்சநீதிமன்ற நீதிபதியாக கடந்த பெப்ரவரி 25ம் திகதி அதிபர் ஜோ பைடன் தேர்வு செய்தார். அமெரிக்க செனட் சபை அங்கீகாரத்திற்காக கடந்த ஏப்ரல் மாதம் வாக்கெடுப்பு நடைபெற்றது. இதில் நீதிபதி ஜாக்சனை ஆதரித்து 53 வாக்குகளும் எதிர்த்து 47 வாக்குகளும் கிடைத்தன.

தொடர்ந்து, கறுப்பினத்தைச் சேர்ந்த கேடான்ஜி பிரவுன் ஜாக்சனை நியமிக்க அந்நாட்டு நாடாளுமன்ற மேலவை ஒப்புதல் அளித்தது. இந்த நிலையில், 51 வயதான கேடான்ஜி பிரவுன் ஜாக்சன் நேற்று பதவியேற்றுக் கொண்டார். இதன்மூலம் அமெரிக்க உச்சநீதிமன்றத்தின் முதல் கறுப்பின பெண் நீதிபதி என்ற பெருமையை இவர் பெறுகிறார். இவருக்கு முன்பாக இரு கறுப்பின ஆண்கள் மட்டுமே உச்சநீதிமன்ற நீதிபதிகளாக இருந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

வொஷிங்டனில் உள்ள கொலம்பியா மாவட்ட மேல்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியாக இருந்த கேடான்ஜி பிரவுன் ஜாக்சன், அமெரிக்க உச்சநீதிமன்றத்தின் 6வது பெண் நீதிபதியாக பதவியேற்றுக் கொண்டார். உச்சநீதிமன்றத்தின் 233 ஆண்டுகால வரலாற்றில் இதுவரை 5 பெண் நீதிபதிகள் மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளனர் என்பதுநினைவுகூரத்தக்கது. அமெரிக்காவின் அரசியலமைப்பை ஆதரிப்பதற்கும் பாதுகாப்பதற்கும், பயம் அல்லது தயவு இல்லாமல் நீதியை வழங்குவதற்கும் முழு மனதுடன் நான் பொறுப்பேற்கிறேன் என்று ஜாக்சன் உறுதியளித்துள்ளார்.



## உக்ரைனில் அடுக்கு மாடி குடியிருப்பு மீது ரஷ்யா ஏவுகணைத் தாக்குதல்; 10 பேர் பலி

உக்ரைன் மீது ரஷ்ய படைகள் கடந்த பெப்ரவரி மாதம் 24ம் திகதி தாக்குதலை தொடங்கியது. 5 மாதங்களுக்கு மேல் இந்த தாக்குதல் நீடித்து வருகிறது.

இந்த போரில் ஏராளமான வீரர்கள் மற்றும் பொது மக்கள் பலியாகி விட்டனர். பல நகரங்கள் ரஷ்யாவின் மும்முனை தாக்குதலால் சீர்குலைந்து போய் உள்ளது. உயிருக்கு பயந்து பொதுமக்கள் அங்கிருந்து காலி செய்து ஓடி விட்டனர். ரஷ்ய படைகள் தற்போது கிழக்கு உக்ரைன் பகுதிகள் மீது தங்கள் கவனத்தை திருப்பி உள்ளது. அங்குள்ள பெரும்பாலான நகரங்களை ரஷ்யா கைப்பற்றி விட்டது.

லிவிசான்ஸ்சா நகரத்தை பிடிக்க தனது தாக்குதலை தொடர்ந்து நடத்தி வருகிறது. இந்த நிலையில் கருங்கடல் பகுதியில் அமைந்துள்ள உக்ரைனுக்கு சொந்தமான ஸ்னேக் தீவில் இருந்து ரஷ்ய படைகள் வெளியேறிவிட்டன.

இந்த தீவில் இருக்கும் ரஷ்ய படைகளுக்கு உணவு மற்றும் பொருள்கள் ஏற்றி சென்ற படகுகள் மீது உக்ரைன் படையினர் ஆளில்லாத விமானம் மூலம் ஏவுகணை தாக்குதல் நடத்தினர்.

உக்ரைன் வீரர்களின் உக்கிரமான தாக்குதலை தாக்குபிடிக்க முடியாமல் ரஷ்ய படைகள் அங்கிருந்து வெளியேன என உக்ரைன் பாதுகாப்பு அதிகாரி தெரிவித்தார். இதனால் ஸ்னேக் தீவை உக்ரைன் தன் வசப்படுத்தி உள்ளது.

ஸ்னேக் தீவில் இருந்து ரஷ்ய படைகள் வெளியேறிய சில மணி நேரங்களில் உக்ரைன் தெற்கு பகுதியில் உள்ள கடற்கரை நகரமான ஒடேசாவில் உள்ள பெரிய அடுக்கு மாடி குடியிருப்பு கட்டடம் மீது ரஷ்யா சரமாரியாக ஏவுகணை தாக்குதலை நடத்தியது.

இந்த தாக்குதலில் அந்த கட்டடம் சேதம் அடைந்தது. இதில் இடிபாடுகளுக்குள் சிக்கி சம்பவ இடத்திலேயே 3 குழந்தைகள் உள்பட 6 பேர் இறந்தனர். இதுபற்றி அறிந்த ராணுவ வீரர்கள் மற்றும் மீட்பு படையினர் விரைந்து சென்று மீட்பு பணியில் ஈடுபட்டனர். அப்போது மேலும் 4 பேரின் உடல்கள் கைப்பற்றப்பட்டன. இதனால் பலி எண்ணிக்கை 10 ஆக உயர்ந்துள்ளது. அவர்கள் பெயர் உடனடியாக தெரியவில்லை. இந்த தாக்குதலில் மேலும் பலர் உயிர் இழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.



## சூடானில் பேரணி சென்றவர்கள் மீது துப்பாக்கிச் சூடு; 8 பேர் சாவு

சூடானில் கடந்த 2019ஆம் ஆண்டு உமர் அல் பஷிர் ஆட்சி அகற்றப்பட்டு ராணுவ ஆட்சி அமைந்தது. பொதுமக்கள் ஆட்சி கவிழ்ப்புக்கு எதிராக போராட்டம் நடத்தினார்கள். அன்று முதல் ராணுவ ஆட்சியை எதிர்த்து போராட்டம் நடந்து வருகிறது. சூடான் தலைநகர் கார்ட்டமின் இரட்டை நகரமான ஓம்குர் மாரில் இருந்து நேற்று ஆயிரக்கணக்கான பொதுமக்கள் ஆட்சி கவிழ்ப்புக்கு எதிராக போராட்டம் நடத்தினார்கள்.

அவர்கள் கையில் அந்தநாட்டு கொடிகளை ஏந்தி பேரணியாக சென்றனர். அப்போது அவர்கள் ராணுவ ஆட்சிக்கு எதிராக கோஷம் எழுப்பினார்கள், அவர்கள் மீது பாதுகாப்பு படையினர் கண்ணீர் புகை குண்டுகளை வீசினார்கள். மேலும் துப்பாக்கியாலும் சுட்டனர். இந்த துப்பாக்கிச் சூட்டில் 6 பேர் சம்பவ இடத்திலேயே இறந்தனர் என மருத்துவக் குழுவினர் தெரிவித்தனர். மேலும் கார்டுமீன் நைல் ஆற்றின் குறுக்கே ஒருவர் துப்பாக்கி குண்டு பாய்ந்த நிலையில் இறந்து கிடந்தார். குழந்தை ஒன்றும் மார்பில் குண்டுபாய்ந்த நிலையில் இறந்து கிடந்தது. இதனால் இந்த துப்பாக்கிச் சூட்டில் பலியானவர்கள் எண்ணிக்கை 8 ஆக உயர்ந்து உள்ளது.



## இஸ்லாமாபாத்தில் நாளை பொதுக்கூட்டம் நடத்துவதற்கு இம்ரான் கான் திட்டம்

பிரதமராக இருந்த இம்ரான்கான் கடந்த ஏப்ரல் மாதம் பதவி இழந்தார். நாடாளுமன்றத்தை கலைத்துவிட்டு தேர்தல் நடத்துமாறு கோரி வருகிறார்.

பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த நம்பிக்கை யில்லா பிரேரணை வெற்றி பெற்றதால், பிரதமராக இருந்த இம்ரான் கான் கடந்த ஏப்ரல் மாதம் பதவி இழந்தார். இப்படி பதவி இழந்த முதல் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான்தான்.

அவர் பதவி இழந்ததைத் தொடர்ந்து நாடாளுமன்றத்தை கலைத்துவிட்டு தேர்தல் நடத்துமாறு கோரி வருகிறார்.

இது தொடர்பாக பேரணி, பொதுக்கூட்டம் என நடத்தி வருகிறார். அந்த வகையில், நாளை அவர் இஸ்லாமாபாத்தில் அணி வகுப்பு மைதானத்தில் பிரமாண்ட பேரணி, பொதுக்கூட்டம் நடத்த திட்டமிட்டுள்ளார். இதற்கு அனுமதி வழங்க உத்தரவிட வேண்டும் என்று கேட்டு இஸ்லாமாபாத் ஐகோர்ட்டில், பாகிஸ்தான் தெக்ரிக் இ இன்சாப் கட்சி மனுத் தாக்கல் செய்துள்ளது.

அந்த மனுவில், தங்களது பேரணி, பொதுக்கூட்டத்துக்கு அனுமதி வழங்க வேண்டும் என்று கேட்டு, இஸ்லாமாபாத் பொலிஸ் துணை கமிஷ்னருக்கு விண்ணப்பித்துள்ளதாகவும், ஆனால் அவர் அனுமதி தராமல் தாமதம் செய்கிறார் என கூறி, அனுமதி தருமாறு உத்தரவிடக் கோரி உள்ளனர்.

இந்த மனு இன்று விசாரணைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# கிண்ணியா கடல் பாலத்தில் சூரிய ஒளி மின் விளக்குகள்

## உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துவைப்பு





(ஹஸ்பர்)

மிக நீண்ட காலமாக மின் விளக்கின்றி இருளில் காணப்பட்ட கிண்ணியா கடல் மேல் பாலத்திற்கான சூரிய ஒளியிலான மின் விளக்குகள் அல் ஹிக்மா நிறுவனத்தின் அனுசரணையுடன் உத்தியோகபூர்வமாக கடந்த திங்களன்று செயல்பட ஆரம்பித்து வைக்கப்பட்டன.

கிண்ணியா நகர சபையின் தவிசாளர் எம்.எம். நிவாஸ் தலைமையில் மேற்படி மின் விளக்குகள் திட்டம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் நகர சபை உறுப்பினர்கள், கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.ஹனி, நகர சபையின் செயலாளர் விஷ்ணு மற்றும் உத்தியோகத்தர்கள், அல் ஹிக்மா பவுண்டேசன் நிறுவனத்தின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் இபாதுல்லா, சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் பங்கேற்றனர்.

## உள்நாட்டுத் துப்பாக்கியுடன் 4 பேர் பேரமடு காட்டில் கைது



திருகோணமலை, பேரமடு காட்டுப் பகுதியில் வைத்து சட்ட விரோதமாக அனுமதியின்றி உள்நாட்டு துப்பாக்கிகளை வைத்திருந்த 4 பேரை நேற்றிரவு புதனிரவு தாங்கள் கைது செய்துள்ளோம் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கந்தளாய் அக்போகம பகுதியைச் சேர்ந்த இருவரும் மற்றும் கந்தளாய் அக்போபுர பகுதியைச் சேர்ந்த இருவருமே கைது செய்யப்பட்டுள்ளனர் என வன ஜீவராசி அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

கந்தளாய் பிராந்திய வன ஜீவராசி அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகலின் அடிப்படையிலேயே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என வனஜீவராசி அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபர்களிடமிருந்து உள்நாட்டு துப்பாக்கி, கத்தி, துப்பாக்கி குண்டுகள், மருந்துகள் மற்றும் லைட் போன்றனவும் கைப்பற்றப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேகநபர்களை தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதோடு, கந்தளாய் நீதிவான் முன்னிலையில் அவர்களை ஆஜர்படுத்த உள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## கதைமாமணி மாஸ்டர் சிவலிங்கத்தின் சிலை மட்டக்களப்பில் திறந்துவைப்பு

இலங்கையின் புகழ்பெற்ற கலைஞர் மறைந்த கலா பூஷணம், கதைமாமணி மாஸ்டர் சிவலிங்கத்திற்கு மட்டக்களப்பில் தொழில் நுட்பக் கல்லூரிக்கு முன்னால் சிலை நிறுவப்பட்டு, நேற்றுக் காலை திறந்து வைக்கப்பட்டது.

கல்லடி சிவானந்தா வித்தியாலய பழைய மாணவர்களான சிவானந்தியன் சகபாடிகள் அமைப்பினால் நிறுவப்பட்ட இந்தச் சிலையை திறக்கும் நிகழ்வில் மட்டக்களப்பு மாநகர மேயர் தியாகராசா சரவணபவன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

கிழக்கு பல்கலைக்கழக சுவாமிவிபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவக பணிப்பாளர் கலாநிதி பாரதி கென்னடி, காத்தான்குடி பொலிஸ் நிலைய போதை ஒழிப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஏ.எம்.சீ.ஜவாஹிர் உட்பட பல பிரமுகர்கள், கலைஞர்கள் அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

மறைந்த புகழ் பெற்ற மாஸ்டர் சிவலிங்கம் மாணவர்களுக்குக் கதை சொல்வதனூடாக சிறந்த சமுதாயமொன்றைக் கட்டியெழுப்பியவர்.

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனங்களிலும் தொடர்ந்து சிறுவர் கதை சொல்லும் நிகழ்ச்சியை நடத்தியவர் என்பதும், 'தினபதி', 'சிந்தாமணி' பத்திரிகைகளில் நீண்ட காலம் உதவி ஆசிரியராகவும் பணியாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ரூ. 20 லட்சம் பணம், 13 பவுண் நகை அக்கரைப்பற்றில் நள்ளிரவில் அபேஸ்



அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அக்கரைப்பற்று 7ஆம் பிரிவில் உள்ள வீடொன் றில் நேற்று அதிகாலை 20 லட்சத்து 40 ஆயிரம் பணமும் 13 பவுண் நகைகள் மற்றும் இரண்டு கையடக்கதொலை பேசிகளும் திருடப்பட்டுள்ளன என அக்கரைப்பற்று பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வியாபார நிலையங்களை நடத்தி வரும் தந்தை மற்றும் மகன் வசிக்கும் வீட்டிலேயே இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

வீட்டின் உரிமையாளர், அவரது மனைவி மற்றும் மகன் உள்ளிட்டவர்கள் உறக்கத்திலிருந்த சந்தர்ப்பத்தில் இச்சம்பவம் இடம் பெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதிகாலை இரண்டு மணியளவில் மனைவியின் கூக்குரல் கேட்டு எழுந்த வீட்டின் உரிமையாளர் வீட்டில் இருந்த நகைகள், வங்கியில் வைப்பிலிடுவதற்காக வைத்திருந்த பணம் மற்றும் கைத்தொலைபேசி உள்ளிட்டவை அபகரிக்கப்பட்டமையைத் தெரிந்துகொண்டார்.

வீட்டின்உரிமையாளர்பதிவுசெய்தமுறைப்பாட்டினை அடிப்படையாக வைத்து சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## அம்பலத்தடி பிள்ளையார் ஆலயத்தின் கும்பாபிஷேகக் கிரியைகள் ஆரம்பம்





(காரைதீவு நிருபர் சகா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கல்முனை மாநகர் நற்பிட்டிமுனை அருள்மிகு ஸ்ரீ அம்பலத்தடி விநாயகர் தேவஸ்தான மகா கும்பாபிஷேக பெருஞ் சாந்தி நிகழ்வு நாளை சனிக்கிழமை ஆரம்பமாகின்றது.

எதிர்வரும் 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 5 மணி முதல் மாலை 5 மணி வரை எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெற இருக்கின்றது .

மறுநாள் 6ஆம் திகதி புதன் கிழமை அஷ்ட பந்தனை பஞ்சகுண்ட பக்ஷ பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் இடம்பெற இருக்கின்றது என ஆலய பரிபாலன சபை பொருளாளர் ஓய்வு நிலை உதவிக் கல்வி பணிப்பாளர் எஸ்.இலங்கநாதன் தெரிவித்தார்.

குறிப்பாக, அன்று அதிகாலை 5.56 மணி முதல் 6.44 மணி வரையிலான சுபமுகூர்த்த வேளையில் ஸ்ரீ அம்பலத்தடி விநாயகர் பெருமாளுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் மகா கும்பாபிஷேக குடமுழுக்கு இடம்பெற இருக்கின்றது. பிரதிஷ்டா பிரதம குரு ஈசான சிவாச்சாரியார் சிவ ஸ்ரீ க.கு. மோஹனாநந்த குருக்கள் தலைமையில் மகா கும்பாபிஷேகம் நடைபெற இருக்கின்றது.

கும்பாபிஷேகத்தை தொடர்ந்து 11 தினங்கள் மண்டலாபிகே பூஜைகள் நடைபெறும்.

18 ஆம் திகதி திங்கட்கிழமை 1008 சங்குகளுடன் சகஸ்ர நாம சங்காபிஷேகம் இடம் பெறும் என்று பிரதிநிதி எஸ்.இலங்கநாதன் மேலும் தெரிவித்தார்

அதேவேளை அன்று திங்கட்கிழமை காலை 8 மணிக்கு பாற்குட பவனியும் 9 மணிக்கு சங்காபிஷேகமும் அதனைத் தொடர்ந்து அன்னதானமும் இடம்பெற இருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# முஸ்லிம்களுக்கு பாரிய அநீதிகளை ஏற்படுத்திய அரசு அரபு நாடுகளிடம் உதவி கோர வெட்கப்படவேண்டும்!



## பைசர் முஸ்தபா சாட்டை

கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்தில் முஸ்லிம் சமூகத்துக்கு ஏற்படுத்திய அநியாயங்கள் வேறு எந்த அரசாங்கத்தாலும் ஏற்படுத்தப்படவில்லை. இந்நிலையில் அரபு நாடுகளுக்கு சென்று உதவி கேட்பதற்கு அரசாங்கம் வெட்கப்படவேண்டும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உபதலைவர் முன்னாள் அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மத்திய கொழும்பு காரியாலயத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

நாடுபாரியபொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுத்துள்ளது. பணம் இருந்தாலும் மக்களுக்கு பெற்றுக் கொள்வதற்கு அத்தியாவசியப் பொருள்கள் இல்லை.

சிறிமா அம்மையாரின் காலத்திலும் மக்கள் அத்தியாவசியப் பொருள்களுக்கு வரிசையில் இருந்தார்கள். ஆனால் அன்று மக்களுக்குத் தேவையான பொருள்கள் இருந்தன. மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களை விநியோகிப்பதில் இந்த அரசாங்கத்தை தவிர எந்த அரசாங்கமும் தோல்வியடைந்ததில்லை.

அத்துடன் ஏற்பட்டிருக்கும் எரிபொருள் பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வுகாண்பது என அரசாங்கம் தடுமாறிக்கொண்டிருக்கின்றது.

பல நாடுகளிடமும் எரிபொருள் உதவிகளை கேட்டபோதும் இந்த அரசாங்கத்துக்கு உதவி செய்ய யாரும் தயார் இல்லை. இறுதியாக தற்போது அரபு நாடுகளின் உதவியை அரசாங்கம் கோரி வருகின்றது. அரபு நாடுகளிடம் எரிபொருள் உதவி கோருவதற்கு அரசாங்கம் வெட்கப்பட வேண்டும். அரசாங்கம் ஆட்சிக்கு வந்த ஆரம்பத்தில் இருந்தே முஸ்லிம் சமூகத்துக்கு பாரிய அநீதிகளை மேற்கொண்டு வந்திருக்கின்றது.

குறிப்பாக கொவிட் தொற்றில் மரணிக்கும் முஸ்லிம் ஜனாஸாக்களை எரிக்காமல் அடக்கம் செய்ய அனுமதிக்குமாறு அரபு நாடுகள் கூட்டாக ஜனாதிபதியிடம் கோரி இருந்தன. ஆனால் ஜனாதிபதி அவர்களின் கோரிக்கையை நிராகரிக்கும் வகையில் எந்த பதிலையும் அவர்களுக்கு வழங்கவில்லை.

இந்நிலையில் அரசாங்கம் தற்போது எரிபொருள் பிரச்சினைக்கு உதவுமாறு அரபு நாடுகளைக் கேட்டு வருகின்றது. நாடு தற்போது எதிர்கொண்டுள்ள எரிபொருள் பிரச்சினைக்கு அரபு நாடுகள் உதவி செய்யவேண்டும் என்பதே எமது கோரிக்கை.

ஆனாலும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளைப் பார்த்து எந்த நாடும் எமக்கு உதவப்போவதில்லை. மாறாக, இலங்கை மக்களுக்காக அவர்கள் உதவி செய்யும் என்றே நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

மேலும் ஜனாதிபதியின் தான் தோன்றித்தனமான, எதேச்சதிகாரமான தீர்மானம் காரணமாகவே நாட்டில் உணவுப் பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்படுகின்றது.

விவசாயம் தொடர்பான அறிவு, அனுபவம் உள்ளவர்களிடம் எந்த ஆலோசனையும் கேட்காமல் இரசாயன உரத்தைத் தடை செய்தார் ஜனாதிபதி.

20 ஆவது திருத்தத்தில் ஜனாதிபதிக்கு வழங்கிய அதிகாரங்களே அவர் இவ்வாறு தன்னிச்சையாக தீர்மானங்களை எடுப்பதற்கு காரணமாகும். அதனால் 20 ஆவது திருத்தத்துக்கு ஆதரவளித்த அனைவரும் ஜனாதிபதியின் முட்டாள் தனமான தீர்மானங்களுக்குப் பொறுப்புக்கூறவேண்டும்.

எனவே மக்களின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு ஜனாதிபதி தனது பதவியைத் துறக்கவேண்டும். இன்னும் 2 வருடங்கள் கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரத்தில் இருந்தால் எமது நாடு சோமாலியாவைவிட மோசமான நிலைக்குச் சென்றுவிடும். – என்றார்.

# நெருக்கடியினால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மக்களுக்கு உதவத் தயார்

## பிரிட்டனின் வெளியுறவு அலுவலக அமைச்சர் தெரிவிப்பு

அரசாங்கத்தாலும் மத்திய வங்கியாலும் வெளியிடப்பட்ட வெளிநாட்டு நாணயமாற்று விவரங்கள் உள்ளடங்கலாக இலங்கையின் பொருளாதார நிலைவரத்தை தாம் உன்னிப்பாக அவதானித்து வருவதாக பிரிட்டனின் வெளியுறவு அலுவலக அமைச்சர் விக்கி போர்ட் தெரிவித்துள்ளார்.

பிரிட்டன் பொது அவைக்கு எழுத்துமூலம் அனுப்பிவைத்துள்ள பதில் கடிதத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ள அமைச்சர் விக்கி ஃபோர்ட், கொரோனா வைரஸ் பரவலுக்கு முன்னர் சுமார் 30 சதவீதமான வருமானத்தைப் பெற்றுக்கொடுத்த சுற்றுலாத்துறையே இலங்கையின் முக்கிய வருமானமீட்டல் துறையாகக் காணப்பட்டது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இருப்பினும் கடந்த 2020 ஆம் ஆண்டு சுமார் 80 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்த இலங்கையின் சுற்றுலாத்துறை, 2021 ஆம் ஆண்டில் 60 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

அந்நாட்டு சுற்றுலாத்துறைக்கான முக்கிய பங்களிப்பாளராக பிரிட்டன் விளங்குகின்றது. கடந்த மூன்று வருடகாலமாக இலங்கைக்கு மூலப்பொருள்களை விநியோகிக்கும் மூன்று முக்கிய வழங்குநர்களில் இலங்கையும் உள்ளடங்குகின்றது என்றும் பிரிட்டனின் வெளியுறவு அலுவலக அமைச்சர் விக்கி போர்ட் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் கடந்த மூன்று வருடகாலத்தில் வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்களின் பணவனுப்பல்கள் இலங்கையின் பொருளாதாரத்துக்கு முக்கிய பங்களிப்பை வழங்கிவந்திருப்பதுடன் அவை இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் முறையே 8 மற்றும் 9 சதவீதமாக அமைந்துள்ளன.



இருப்பினும் வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்களின் பணவனுப்பல்கள் 2021 ஆம் ஆண்டில் 20 சதவீதத்தால் வீழ்ச்சிகண்டிருப்பதுடன், இது கடந்த 2011 ஆம் ஆண்டின் பின்னர் பதிவான தரவுகளின் பிரகாரம் மிகவும் உயர்வான வீழ்ச்சியாக அமைந்திருக்கின்றது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறானதொரு பின்னணியில் இலங்கை பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருப்பதைத் தாம் அங்கீகரிப்பதாகவும், இப்பொருளாதாரத்தை மீண்டும் நிலைபேறான பாதைக்குக் கொண்டுவருவதற்கு அவசியமான மறுசீரமைப்புக்களை மேற்கொள்வது தொடர்பாக சர்வதேச நாணய நிதியத்துடன் மிகவும் ஆழமான கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதைத் தாம் வரவேற்பதாகவும் தெரிவித்துள்ள பிரிட்டன் அமைச்சர் விக்கி ஃபோர்ட், தமது பிரதமர் கடந்த மே மாதம் 30 ஆம் திகதி இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் கலந்துரையாடினார் எனவும் இதன்போது பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் இலங்கை மக்களுக்கு உதவுவதற்கான தமது கடப்பாட்டை அவர் மீளவலியுறுத்துகிறேன் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# சிறந்த தலைமைத்துவத் தட்டுப்பாடே நாட்டின் இன்றைய முக்கிய பிரச்சினை

## தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் கூறுகிறார்

இலங்கை முகங்கொடுத்திருக்கும் மிகப்பாரிய தட்டுப்பாடு டொலருக்கும் எரிபொருள், எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசியப்பொருள்களுக்கும் ஏற்பட்டிருக்கும் தட்டுப்பாடு என்று கூறப்படும் கருத்தைத் தன்னால் ஏற்றுக்கொள்ள முடியாது என்று தெரிவித்திருக்கும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் அமால் குமாரகே, மாறாக இலங்கையில் சிறந்த தலைமைத்துவத்துக்குக் காணப்படும் தட்டுப்பாடே மிகப் பாரியதும் தீவிரமானதுமாகும் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடு பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் தற்போதைய சூழ்நிலையில் எரிபொருள் தட்டுப்பாட்டின் காரணமாக நாடு முற்றாக முடங்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இருப்பினும் இந்த நெருக்கடியை உரியவாறு கையாள்வதற்கான நடவடிக்கைகள் எவையும் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படாத நிலையில், இதுதொடர்பாகத் தனது டுவிட்டர் பக்கத்தில் செய்திருக்கும் பதிவிலேயே அவர் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்தப் பதிவில் அவர் மேலும் கூறியிருப்பவை வருமாறு –

எரிபொருள், எரிவாயு, டொலர் ஆகியவற்றுக்கு ஏற்பட்டிருக்கும் தட்டுப்பாடே இலங்கை முகங்கொடுத்திருக்கும் மிகப்பெரிய தட்டுப்பாடு என்று கூறுவதை என்னால் ஏற்றுக்கொள்ளமுடியாது. மாறாக இலங்கையில் சிறந்த தலைமைத்துவத்துக்கே தட்டுப்பாடு நிலவுகின்றது.

உரியவாறுகையாளக்கூடிய ஒவ்வொரு நெருக்கடியும் ஆபத்தாக விரிவடைந்து, அந்த ஆபத்து வேறோர் பிரச்சினையைத் தோற்றுவிக்கின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் நாம் உன்னிப்பாக அவதானித்தால், அங்கு தலைவர்களின் தலைமைத்துவத்தில் குறைபாடு இருப்பதைப் புரிந்துகொள்ளமுடியும். – என்று அவர் அந்தப் பதிவில் தெரிவித்துள்ளார்.

# பொருளாதார நெருக்கடிக்கு எதிராக வவுனியாவில் கையெழுத்து சேகரிப்பு




வவுனியாவில் பொருளாதார நெருக்கடிக்கு எதிராக கையெழுத்து சேகரிப்பு நடவடிக்கை இலுப்பையடி சந்தியில் நேற்று (வியாழக்கிழமை) முன்னெடுக்கப்பட்டது.

மேற்படி நடவடிக்கை சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பினரால் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணக் கோரி, பட்டினிச் சாவைத் தடுக்க மக்களே முன்வாரீர் எனும் தொனிப்பொருளில் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராகவும் 25 ஆயிரம் பேரின் கையெழுத்து பெறும் நோக்கில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதன் முதற்கட்டமாக வவுனியா இலுப்பையடிச் சந்தியில் கையெழுத்து சேகரிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதுடன், இந்த நடவடிக்கையில் இன, மொழி பேதங்களுக்கு அப்பால் பல மக்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு கையெழுத்திட்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.07.2022இல் வெளியிடப்பெற்றது.